**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

OS.676/2018

நாள். 06.09.2022

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 06.09.2022 ம் நாளாகிய இன்று திரு.ரத்தினவேல், Gr-II பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி: | :.வா.சா.3 | ஜாதி | : |
| பெயர் | கீதா | தொழில் | : |
| க/பெ. | : ராஜசேகரன் | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் அழைப்பாணை பெற்றுக்கொண்டேன். நான் வட்டார போக்குவரத்து அலுவலகம், சேலம் மேற்கில் இளநிலை உதவியாளராக பணியில் இருக்கிறேன். எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அனுமதி அளித்துள்ளார், அந்த அனுமதி கடிதம் **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் TN 30 BW 9031 என்ற டிப்பர் லாரியின் ஆவணங்கள் சம்மந்தமாக சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி வாகனம் ஓமலூர் பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். மேற்படி பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகம் எங்களது வட்டார போக்குவரத்து அலுவலகம், சேலம் மேற்கு அலுவலகத்திற்கு கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். ஆவணம் வாகனத்தின் பதிவு ஓமலூர் பகுதி அலுவலகத்தில்தான் பதிவு செய்யப்படும். பதிவு ஆவணத்தின் பெயர் மாற்றங்கள் சேலம் மேற்கு வட்டா போக்குவரத்து அலுவலகத்தில் செய்யப்படுமா என்றால் இல்லை, பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகத்திலேயே செய்யப்படும், அனுமதி சீட்டு மட்டுமே எங்களது அலுவலகத்தில் வழங்கப்படும். மேற்படி TN 30 BW 9031 என்ற டிப்பர் லாரியின் அனுமதி சீட்டு (Permit) மட்டும் எங்களது அலுவலகத்தில் surrender செய்துள்ளார். surrender ஆனது எந்த தேதியில் செய்யப்பட்டது என்றால் 04.08.2021 ல் ராஜ்குமார் கொடுத்த

விண்ணப்பத்தின்பேரில் surrender செய்யப்பட்டது. அந்த விண்ணப்பத்தின்பேரில் எங்கள் அலுவலகத்தில் அன்றைய தேதியிலேயே அந்த வண்டிக்கு எந்தவித வரிபாக்கி இல்லா சான்று இல்லை என Clearance வழங்கப்பட்டது. மேற்படி விண்ணப்பத்தை ஓமலூர் பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு அதனை எங்களது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்பு தான் நாங்கள் அதனை சரிபார்த்து Clearance வழங்குவோம். ஓமலூர் பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ராஜ்குமார் 02.08.2021 தேதியில் விண்ணப்பம் கொடுத்திருந்தார். மேற்படி விண்ணப்பத்தின் பின்புறத்தில் பகுதி அலுவலகத்தில் இருந்து எந்தவித வரி நிலுவையில் இல்லை என சான்று வழங்கியிருந்தார்கள். அதற்கான கட்டணம் கட்டப்பட்டதற்கான சான்றும் விண்ணப்பதுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு Permit தொலைந்துவிட்டதாக Online complaint கொடுத்து அதற்கான ஆவணங்களை ஒப்படைத்துள்ளோம். அந்த ஆவணத்திலும் ராஜ்குமார்தான் வாகனத்தின் உரிமையாளர் என 04.02.2021ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி வாகனத்தை பற்றி குறிப்பிட்டு சான்றுகள் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். TN 30 BW 9031 ஆவணத்தின் நகல்கள் **சா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாகன உரிமையாளர் இறந்துவிட்டால் ஒரு மாதத்திற்குள் எங்கள் அலுவலகத்திற்கு இறந்துவிட்டார் என தகவல் அளிக்க வேண்டும், அவ்வாறு தகவல் அளிக்கவில்லை எனில் அவர் உயிருடன் இருப்பதாகத்தான் கருதப்படும். வாகனத்தின் உரிமையாளர் ராஜ்குமார் 01.05.2018 தேதியிலேயே இறந்துவிட்டார் என்றும், அதன் விவரங்கள் எங்களது பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தெரியும் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மோசடியாக இறந்த ராஜ்குமார் பெயரில் ஏற்பட்ட பெயர் மாற்றங்கள் குறித்து புகார் அளிக்க முடியுமா என்றால் தகவல் தெரிந்தால் முடியும்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

**ஒப்பம்/PW3**

**ஒப்பம்/உதவி அமர்வு நீதிபதி, ஓமலூர்**